# ஸ்தல வரலாறு

# அருள்மிகு காசிவிஸ்நாதர் திருக்கோயில்

## மேற்கு மாம்பலம், சென்னை–33.



## திருக்கோயில் அமைவிடம்

ஆலயம் தொழுவது சாலவும் நன்று எனும் முதுமொழிக்கேற்ப, பாரதத் திருநாட்டில், சைவம் தழைத்தோங்க, பக்திப் பயிர் வளர்க்கும் சிவத் தலங்களுள், தலைசிறந்த திருக்கோயில்கள் சென்னை மாநகரத்தில் பல உள்ளன. அவற்றுள் ஒன்றாக தமிழ்நாட்டின் தலைநகரம் சென்னையம்பதியில் மேற்கு மாம்பலம், மேட்லி சுரங்கப்பாதை சாலையில், மூலவர் காசிவிஸ்வநாதர் திருக்கோயில் என்ற திருப்பெயரில் திருக்கோயிலாக எழுப்பப்பட்ட ஆலயம் தான் இந்த காசிவிஸ்வநாதர் திருக்கோயிலாகும்.

## மூலவர் மற்றும் உற்சவ மூர்த்தி சிறப்பு :

இத்திருக்கோயில் கோபுரம் தாண்டி கொடி மரம் பலிபீடம், நந்திகேஸ்வரன் அமைந்துள்ளது. இவ்வாலயத்தில் தெற்குபுறம் ஸ்ரீ விநாயகர் சன்னதியும் கிழக்கை நோக்கி ஸ்ரீ காசிவிஸ்வநாதர்

சன்னதியும் வடக்கு புறத்தில் சுப்ரமணியசுவாமி சன்னதியும், தென்னகமும் பார்த்து ஸ்ரீ விசாலாட்சியும் வீற்றியிருக்கிறார்கள். சின்ன நந்தி பலிபீடமும், பஞ்சகோஷ்டமும் அருள்பாலிக்கிறார்கள்.

இத்திருக்கோயிலில் 63 நாயன்மார்களும், தொகையடி களாலும் நால்வர் சன்னதியும் சேக்கிழார் பட்டினத்தார், அருண கிரிநாதர், இராமலிங்க அடிகளார் சன்னதி அமைந்துள்ளது. தெற்கு முகமாக நடராஜர் சன்னதியும் உற்சவ மூர்த்திகளும் பின் பக்கத்தில் வீற்றியிருக்கிறார்கள். அம்மன் சன்னதிக்கு இடப்புறத்தில் வசந்த மண்டபம் அமைந்துள்ளது. வெளிப்பிரகாரத்தில் தென்முகம் பார்த்து காலபைரவர் சன்னதி அமைந்துள்ளது. அதை அடுத்து நவகிரஹ சன்னதி அமைந்துள்ளது. இத்திருக்கோயிலினின் ஸ்தலவிருட்சம் வில்வமரமாகும். கிழக்கு வாசலில் ஏழுநிலை ராஜகோபுரம் தெற்கு மூன்று நிலை ராஜகோபுரம் அமைந்துள்ளது.

வரலாற்று சிறப்பு :

மேற்கு மாம்பலத்தில் வீற்றியிருக்கும் அருள்மிகு ஸ்ரீகாசி விஸ்வநாதர் ஆலயம் சுமார் 300 ஆண்டுகளுக்கு முன் தோன்றியதாக வரலாற்று வல்லுநர்கள் கூறுகிறார்கள். ஆலயம் தோன்றுவதற்கு முன்னால் இந்த இடங்கள் முழுவதும் வில்வமரங்களாக காட்சியளித்தது. அருகில் சிறு ஏரியும் , கிராமமும் இருந்தது. கிராமத்தின் பெயர் மஹாபிலம். வில்வ மரங்களில் நடுவில் ஸ்ரீசிவபெருமான் சிவலிங்கமாக வீற்றிருப்பதை கண்ட கிராம வாசிகள் ஈஸ்வரனுக்கு கோயில்கட்ட பிராயசை கொண்டார்கள் மிகவும் அற்புதமாக கோயில் எழுப்ப ஆரம்பித்தது.
வில்வ மரங்களிடையே லிங்கம் தோன்றியதால் மஹாபிலஷேத்திரம் என்றும் கிராம மக்கள் பெயரிட்டார்கள் (மஹாபிலம் என்பது மருவி மாம்பலம் என்று தற்பொழுது அழைக்கப்படுகிறது.)

## பூஜை காலங்கள் :

காலசந்தி, சாயரட்சை என இரு கால பூஜைகள் நடைமுறையில் இத்திருக்கோயிலில் இருந்து வருகிறது.

## நடை திறந்திருக்கும் நேரம் :

திருக்கோயில் தினமும் காலை 6.30 மணி முதல் 11.00 மணி வரையும் மாலை 5.00 மணியிலிருந்து இரவு 9.00 மணி வரை பொதுமக்கள் வழிபாட்டிற்காக திருக்கோயில் திறந்திருக்கும்.

## திருவிழாக்கள் விவரம் :

இத்திருத்தலத்தில் நடக்கும் விழாக்களில் பெருவிழாவாக நடப்பது பிரம்மோற்சவ விழா 10 நாட்கள் நடைபெறும். இவ்விழாவில், மெய்யன்பர்கள் அலை அலையாக வந்து காசிவிஸ்வநாதர் அருளை பெற்று செல்கின்றனர். மேலும் இத்திருக்கோயிலில் பிரதோஷம், சித்ரா பௌர்ணமி, ஆடித்திருமஞ்சனம், ஆடிப்பூரம் , நவராத்திரி உற்சவம், அன்னபிஷேகம், கார்த்திகை தீபம், சங்கபிஷேகம், இலட்சதீபம், ஆருத்ரா தரிசனம், மஹாசிவராத்திரி போன்ற திருவிழாக்கள் இனிதே நடைபெற்று வருகிறது.

## வழித்தடம் :

இத்திருக்கோயில் கோயம்பேட்டிலிருந்து சுமார் 7கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இறங்குமிடம்: தியாகராயர் நகர் பேருந்து நிறுத்தம். மாநகர பேருந்து தடம் எண் 11 , 88C, M54,13,5B கோயம்பேட்டிலிருந்து 27C, 27M

பேருந்து நிலையத்தின் தூரம்:

தியாகராயர் நகர் பேருந்து நிலையத்திலிருந்து சுமார் ½ கிலோமீட்டர் தொலைவில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது.

இரயில் நிலைய தூரம்:

சென்னை மாம்பலம் இரயில் நிலையத்திலிருந்து சுமார் ½ கிலோமீட்டர் தொலைவில் இத்திருக்கோயில் அமையப்பட்டுள்ளது.

இத்திருக்கோயில் தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறை ஆளுகைக்குட்பட்டு செயல் அலுவலர் மற்றும் தக்கார் அவர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

தொடர்பு கொள்ளும் முகவரி :


செயல் அலுவலர்<br>
அருள்மிகு காசிவிஸ்வநாதர் திருக்கோயில்<br>
ஈஸ்வரன் கோயில் தெரு,<br>
மேற்கு மாம்பலம், சென்னை–33.